மலர் 2 இதழ் 1 ஜுலை, 2017 ISSN : 2454-3993

# புறநானூற்றில் உடைமைச் சமூகத்தின் தோற்றம்

ச.பாலசுப்பிமணியன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
பிஷப்ஹீபர் கல்லூரி
திருச்சி

சங்க இலக்கியங்கள் இனக்குழுச் சமூகமான பொதுவுடைமைச் சமூகத்தையும் தனிமனித இதிகார வாக்கச் சமூகமான உடைமைச் சமூகத்தையும் கொண்டுள்ள இலக்கிய பதிவாகும். இதில் இனக்குழுச் சமூகத்தின் முடிவு எல்லையும் உடைமைச் சமூகத்தின் தோற்றுவாயும் ஒருங்கே அமையப் பெற்றுள்ளன. சங்க இலக்கியத்தின் இறுதிப் படிநிலையான வேந்தர் சமூகத்தில் முழுமையான உடைமைச் சமூகச் சூழலைக் காணலாம். அந்தவகையில் உடைமைச் சமூகத்தின் தோற்றம், வளர்ச்சிநிலையை ஆராயும்நோக்கில் இக்கட்டுரையானது அமைகிறது.

**பொதுவுடைமைச் சமூகம்**

சீறூர் மன்னன் அல்லது வேளிர் என்றழைக்கப்படும் இனக்குழு வாழ்கைமுறையில் உடைமையாகக் கருதுதல் என்ற எண்ணம் இன்றி, உழைப்பின் வாயிலாகப் பெறப்படும் அனைத்து உடைமைகளையும் பொதுத் துய்ப்பில் வைத்து அனைவரும் பங்கிட்டுப் பயன்படுத்தியுள்ளனர். அனைவரின் கூட்டு உழைப்பால் மட்டுமே பொருளீட்டுதல் நிகழ்ந்துள்ளது. அவை பொதுத் துய்ப்பில் இருந்தபோதும் அக்குழுக்கான உடைமையாக எண்ணப்பெற்றன. இதனை வெட்சிப்போர் நன்கு உணர்த்துகிறது. ஒரு குழுவில் இருக்கும் ஆக்களை மற்றொரு குழுக்கள் கவர்ந்து செல்வதும் அதனைப் பொதுவான ஓர் இடத்தில் நிறுத்தி வைத்து வெற்றி பெற்ற குழுவில் இருக்கும் அனைவருக்கும் பங்கிட்டு வழங்குதலும் நிகழ்ந்துள்ளதை

“ஒள்வாண் மலைந்தார்க்கு மொற்றாய்ந் துரைத்தார்க்கும்
புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும் – விள்வாரை
மாறட்ட வென்றி மறவர்தஞ் சீறூரிற்
கூறிட்டார் கொண்ட நிரை” (புற.வெண்.வெட். பாதீடு)

என்ற பாடல் அடிகள் காட்டுகின்றன. இவை குழுச்சமூகத்தில் கூட்டு உழைப்பு நிகழ்ந்தலையும் அதன் அடிப்படையில் பெறப்பட்ட பொருட்கள் (ஆக்கள்) பொதுத்துய்பாக எண்ணப்பெற்று அனைவருக்கும் பாதீடு செய்யப்பட்டுள்ளதையும் காட்டுகிறது.

**வறுமையைப் போற்றும் வேளிர் சமூகம்**

சீறூர் சமூகம் வறுமையைப் போற்றும் சமூகமாக இருந்துள்ளது. வறுமை என்பது குழு முழுமையும் நிலவியிருந்துள்ளது. இதனால் அவர்களிடம் வர்க்க பேதமோ அல்லது இன்னபிற பிரிவினையோ காணப்படவில்லை. நாடோடிகளாய்த்திரியும் பாணர்களாக இருந்தாலும் சரி ஓர் இடத்தில் இருந்துகொண்டு ஆட்சிமை புரியும் (குழுத்தலைமை மட்டும்) சீறூர் மன்னாக இருந்தாலும் சரி, சமூகத்தில் ஒரே மாதிரியான மதிப்பினைப் பெற்று வந்துள்ளனர். வேந்தர் சமூகம் வந்தபோது இழிவாகக் கருதப்பட்ட வரகு, தினை போன்ற உணவுகளே இவர்களின் இவர்களின் முக்கிய உணவாக இருந்துள்ளது. உணவுப் பற்றாக்குறையான காலங்களில்கூடப் பகுத்துண்டு வாழும் மரபினை இவர்கள் போற்றி வந்துள்ளனர்.

இவர்களில் (இனக்குழுச்சமூகத்தில்) ஒரு பிரிவினராகிய பாணர்கள், மன்னர், வேந்தர்களை வாழ்த்திப் பாடிப் பொருள் வேண்டும்பொழுதுகூட தன்னுடைய சுற்றத்தாருக்கும் வேண்டிய பொருட்களைப் பெற்றுவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. வேளிர்களும் தன்னுடைய உணவுப் பொருள்களைப் பாண் மரபினருடன் பகுத்துண்டே பகுத்துண்டே வாழ்ந்தனர்,

“முயல்சுட்ட வாயினுந் தருகுவேம் புகுதந்
தீங்கிருந் தீமோ முதுவாய்ப் பாண
கொடுங்கோட் டாமா னடுங்குதலைக் குழவி
புன்றலைச் சிறாஅர் கன்றெனப் பூட்டும்
சீறூர் மன்ன னெருநை ஞாங்கர்
வேந்துவிடு தொழிலொடு சென்றனன் வந்துநின்
பாடிவி மாலை யணிய
வாடாத தாமரை சூட்டுவ னினக்கே” (புறம்.319)

என்ற பாடலில் பாணனே! படல் கட்டிய முற்றத்தில் உலர்ந்த சிறிய தினைகளைப் புறாக்களும் இதர பறவைகளும் உண்ண வரும். அவற்றைச் சமைத்து உமக்கு தரலாம் என்றாலும் இரவுப் பொழுதானதால் அதுவும் இயலாது. எனவே, இருப்பது முயலினது சுட்ட கறியேயாயினும் அதனை உண்ணத் தருவோம். எம் மனைக்குட் புகுந்து இவ்விடத்தே இருப்பாயாக. எம் மன்னனாகிய கொழுநன் நெருதை பெருவேந்தன் போர்த் தொழிலை மேற்கொண்டு சென்றுள்ளான். நாளை வினைமுடித்து வந்து நின்னுடைய பாடினி மகிழும்படியாக நினக்குப் பொன்னாற் செய்த தாமரைப் பூவைச் சூட்டுவான் என்று தன்னுடைய வறுமைச் சூழலிலும் தொழிலால் வரும் பொருட்களையும் பங்கிட்டுக் கொள்ளும் சீறூர் மன்னனின் இயல்பைத் தலைவி பாடுவதாக ஆலங்குடி வங்கனார் குறிப்பிட்டுள்ளார்.

**உடைமைச் சமூகத்தின் தோற்றுவாய்**

சீறூர் மன்னரை அடுத்து முதுகுடி மன்னர்களைப் பற்றிப் புறநானூறு எடுத்தியம்புகிறது. முதுகுடி மன்னர் சமூகத்தில் பொதுவுடைமைக் கருத்தாக்கங்கங்கள் நிறைந்திருப்பினும் உடைமைச் சமூகத்திற்கான தோற்றுவாய் காண்ப்படுகிறது. அவர்களுடைய சமூக அமைப்பானது மருத நிலத்தில் நிலை பெறுகிறது. புன்செய் நிலத்தில் (தரிசு நிலம்) தானாக விளைந்த அல்லது பெரிதும் மெனக்கிடப்படமல்

கிடைத்த தினை வரகு போன்ற உணவுப்பயிர்களைக் கொண்டு வாழ்ந்த வேளிர் சமூகத்திலிருந்து இவர்களுடைய வாழ்வாதாரச் சூழல் மாறுபடுகிறது. முதுகுடி மன்னர்கள் மருத நிலத்தில் நெல்லினைப் பயிரிட்டு அதனை உணவாகக்கொள்ளும் நிலைக்கு மாறியிருந்தனர். அவர்களுடைய விளைந்த வயல்கள் முழுமையும் முதுகுடி மன்னருக்குச் சொந்தமாய் இருந்தன. இருப்பினும் அவர்கள் விளைந்த நெல்லினை அனைவரும் (தும் மக்கள்) பங்கிட்டுக் கொண்டனர். அந்த அளவில் பொதுவுடைமைக்கான சூழல் அவர்கள் வாழ்விலும் குடிகொண்டிருந்தது.

“குன்றுகண் டன்ன நிலைப்யல் போர்பு
நாட்கடா வழித்த நனந்தலைக் குப்பை
வல்வி லிளையர்க் கல்குபத மாற்றத்
தொல் குடி மன்னன் மகளே” (புறம். 353)

என்ற பாடலில் மலையைக் கண்டாற்போன்ற நிலையினையுடைய நெற்குவியலை நாட்காலையில் வலிய வில் வீரர்களுக்கு நாளுணவாக நல்குவதில் மாறுதல் இல்லாத் தொல் குடி மன்னன் மகள் இவள் என்று விவரிப்பது கதிர் முற்றிய நெல்லினைத் தம்முடைய வில் வீரர்களுக்கு முதுகுடி மன்னர்கள் உணவாக்கிக்கொள்ள கொடுக்கும் சூழலைச் சித்திரிக்கிறது.

**குறுநில மன்னர்கள்**

முதுகுடி மன்னர்களைப் போன்று குறுநில மன்னர்களும் பொதுவுடைமை நிலையிலிருந்து உடைமைச் சமூக மாற்றத்திற்கு வழிகொண்டுள்ளனர். இவர்கள் தம் எல்லைக்கு உட்பட்ட நிலப் பரப்பைத் தன் உடைமையாகக் கருதினாலும் முழுமையும் தன்னுடையது என்ற எண்ணப்போக்கு அற்றவர்களாய் இருந்துள்ளனர். ஆனால் பலர் இணைந்து திருத்திய விளை நிலங்களைத் தான் விருப்பியோரக்கு எவ்வித எதிர்ப்பும் மறுப்பும் இன்றி வழங்கும் அதிகாரம் படைத்தவர்களாக உடைமை உடையவர்களாக இருந்துள்ளனர். குறுநில மன்னர்களின் சமூகமானது தனிமனித விருப்பத்தின் பெயரில் செயல்படும் சமூகமாக மாறியமையை நன்கு உணரமுடிகிறது.

“சுகிர் புரி நரம்பின் சீறியாழ் பண்ணி,
விரை ஒலி கூந்தல் நும் விறலியர் பின் வர.
ஆடினிர் பாடினிர் செலினே,
நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே” (புறம் – 109)

என்ற பாடலில் நாற்பெரும் படைகளோடு பாரியை எதிர்ப்பதைவிட்டு முறுக்கப்பட்ட நரம்பினையுடைய சிறிய யாழைப் பண் இசைத்து, நறுநாற்றத்தையுடைய தழைத்த கூந்தலையுடைய நும் விறலியர் பின்வர, ஆடினிராய்ப், பாடினிராய்ச் செல்லின் பாரி நுமக்கு நாட்டையும் மலையையிம் ஒருங்கே தருவான் என்று கபிலர், பாரியின் கொடைத்தன்மையை விதந்து கூறியிருந்தாலும், பலரால் உருவாக்கப்பட்ட பொருட்களைத் தனியொருவனாகத் தானம் தரும் இயல்பினைக் குறுநில மன்னர்கள் கொண்டுள்ளதை உய்த்துணர முடிகிறது. ஆனால் வேளிர் சமூகத்தில் உணவுப்

பொருட்களே பெரும்பான்மையாகப் பாணர்களுக்கு வழங்கியமையைக் காணமுடிகிறது. குறுநில மன்னர் சமூகத்தில் நிலங்களை உடைமையாக எண்ணும்பட்சத்தில் அதனைத் தானமாகத் தரும் பழக்கம் ஏற்படுகிறது.

**முழுமையான உடைமைச் சமூகம் அல்லது வேந்தர் சமூகம்**

சங்க இலக்கியங்களில் வேந்தர் சமூகம் முழுமையான உடைமைச் சமூகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மருத நிலங்களையும் வணிக நோக்கம்கொண்ட நெய்தல் நிலங்களையும் மையமாகக்கொண்டு வேந்தர் சமூகம் உருப்பெற்றுள்ளது. மருத நிலங்களின் மைய உணவுப் பொருளான நெல்லும் நெய்தல் நிலத்தின் வணிகப் பொருளான முத்தும் வேந்தர்களின் உடைமை சமூகத்தின் முக்கிய பொருள்களாக விளங்கியுள்ளன. தொண்டி, கொற்கை, மதுரை, காவிரிப் பூம்பட்டினம், உறையூர் முதலியவை சேர, சோழ, பாண்டியர்களின் முக்கிய நகரங்களாக விளங்கியுள்ளன. நெல்விளையும் மருத நிலத்திற்கு ஆதாரமாக விளங்கும் ஆற்றுப்படுகைகளும் முத்து விளையும் நெய்தல் நிலத்திற்கு ஆதரமாய் விளங்கும் கடற்கரையோரங்களும் வேந்தர்களின் தலைமையிடமாக இருந்துள்ளன. வேந்தர்களின் வளர்ச்சியினால் புன்செய் வேளாண்மையும் விளைபொருட்களும் மதிப்பிழக்கின்றன. புன்செய் நிலப் பகுதிகளை ஆள்வோரும் மதிப்பிழக்கின்றனர்.

"வட்ட வரிய செம் பொறிச் சேவல்
ஏனல் காப்போர் உணர்த்திய கூஉம்
கானத்தோர், நின் தெல்வர் நீயே
புறஞ்சிறை மாக்கட்கு அறம் குறித்து, அகத்தோர்
புய்த்து ஏறி கரும்பின் விடு கழை தாமரைப்
பூம் போது சிதைய வீழ்ந்தென, கூத்தர்
ஆடு களம் கடுக்கும் அக நாட்டையே" (புறம் 28 8–14)

என்று பாடல் அடிகள் புன்செய் நிலமும் மருத நிலமும் மாறுபட்டதாகக் காட்டப்படுவதுடன் மருத வளம் மேன்மையுடையதாய் புகழப்படுவதையும் காணலாம். வரகும் தினையும் கொள்ளும் எங்கள் உணவு எனப் பொருமையாகப் பேசிய சீறூர் சமூகத்திலிருந்து வரகையும் தினையையும் கள்ளுக்கு விலையாகக் கொடுக்கும் நிலையில் மருத வாழ்வு மாற்றமும் உயர்வும் பெற்றதைக் காணலாம். வளத்தின் அறிகுறியாய்க் கருதப்பட்ட நெல்லுக்கு மறுபுறத்தே வரகும் கொள்ளும் வறட்சிக்கு அறிகுறியாகக் காட்டப்பட்டுள்ளன. எனவே சமூகத்தில் மதிப்பில் இருக்கும் மருத நிலத்தைத் தன் உடைமை நிலமாகக் கொள்வதில் வேந்தர்கள் பேரார்வம் கொண்டிருந்தனர்.

மருதநிலங்கள் முதுகுடி மன்னர்கள் ஆட்சிக்கு உட்பட்டிருந்தமையால் அவர்கள் மீது போர் தொடுத்தல் இயல்பாக அமைந்திருந்தது. போர் தொடுப்பதற்குரிய காரணங்களை அவர்கள் வலிதின் உருவாக்க முயன்றனர். ஒருபக்கத்தில் அவர்களின் உடைமையாக எண்ணப்பெற்ற ஆநிரைகளைத் தமக்கு கீழ் செயல்பட்ட வேளிர்களைக்கொண்டு கவர்ந்து வரச்செய்தனர். இத்தகைய போர் முறையை இலக்கண நூல்கள் வெட்சிப்போர் என்று பதிவுசெய்துள்ளன.

"வென்றி வேந்தன் பணிப்பவும், பணிப்பு இனறியும்,

சென்று இகல் முனை ஆ தந்தன்று".

என்று வெட்சிப்போருக்கு புறப்பொருள் வெண்பாமாலை விளக்கம் தருகிறது. மறுபக்கத்தில் முதுகுடி மன்னர்கள் தங்களுடைய குலம் தவிர்த்துப் பிறருக்குப் பெண் கொடார் என்பதை அறிந்து முதுகுடி மன்னர்களின் பெண்களை மணமுடித்து தருமாறு வேண்டி நின்றனர். அவாகள் பெண் கொடா நிலையில் அவர்கள் மீது போர் தொடுத்தனர். இதனைப் பெண் மறுத்தல் என்று இலக்கண இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

வேந்தர்களுக்கு முதுகுடி மன்னர்களின் மகளைத் திருமணம் செய்வதைக்காட்டிலும் அவர்களுடைய மருத நிலங்களை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். திருமண முறைமைக்கு முதுகுடி மன்னர் எதிர்ப்பு தெரிவிக்கும் சூழலில் அவர்களில் மருத நிலங்களைக் கைப்பற்றுதல் என்பது போருக்கான நோக்கமாக இருந்தாலும் அவை கிடைக்காதபோது அவற்றை அழித்தலைத் தொழிலாக வேந்தர்கள் கொண்டிருந்தனர்.

"வேட்ட வேந்தனும் வெஞ் சினத்தினனே

கடவன கழிப்பு இவள் தந்தையும் செய்யான்

ஒளிறு முகத்து ஏந்திய வீங்கு தொடி மருப்பின்

களிறும் கடிமரம் சேரா் சேர்ந்த

ஒளிறு வேல் மறவரும் வாய் மூழ்த்தனரே

இயவரும் அறியாப் பல் இயம் கறங்க,

அன்னோ, பெரும் பேதுற்றன்று, இவ் அருங் கடி மூதூர்

வேங்கை வெற்பின் விரிந்த கோங்கின்

முகை வனப்பு ஏந்திய முற்றா இளமுலைத்

தகை வளர்த்து எடுத்த நகையொடு,

பகை வளர்த்திருந்த இப் பண்பு இல் தாயே."

என்ற பாடல், மகட்கொடை விரும்பிய வேந்தனும் சினமுடையவன். இவளது தந்தையும் வேந்தனுக்கு மணம் செய்து தராதவன். இவர்களது களிறுகளும் கடிமரத்தைச் சேர்ந்து நிற்பதாக இல்லை. அதனால் இந்தக் கடத்தற்கரிய காவலையுடைய பழமையான ஊரானது இவளுடைய அழகு மிகுதியால் இன்று பாழ்பட்டு அழியப்போகிறது என்று பரணர் மகட்கொடை மறுப்பினால் முதுகுடி மன்னரின் மூதூரின் அழிவைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.

**வரி வசூலித்தல்**

வேந்தர்களின் ஆட்சியில் பெரும்பான்மையான மருத நிலங்கள் தனியொருவனின் கட்டுப்பாட்டிற்கு வந்தபின்னர் அதனை முறைமைப்படுத்தவும் அதன் மீது தன்னுடைய ஆட்சியமையைச் செலுத்தவும் வேந்தர்கள் தவறியதில்லை. முதுகுடி மன்னர் காலம் வரை நிலங்கள் பயிரிடபட்டு அதிலிருந்து பெறப்பட்ட உணவுப்பொருட்கள் அனைவருக்கும் பொதுவுடைமையாகப் பங்கிடப்பட்டு வந்த சூழலில் வேந்தர்கள்

ஆட்சியின்போது வேளாண் செய்வோாரிடமிருந்து பெரும்பொருளை வரியாக வசூலிக்கத் தொடங்கினார்கள். இது நிலத்ன் மீது தனியொருவனுக்கு இருக்கும் உடைமையை பறைசாற்றுவதுடன் உணவு உற்பத்தியில் எவ்வித உழைப்பையும் செலுத்தாத வேந்தன் பெரும் பொருட்களைப் பெறுதல் என்ற உடைமைச் சிந்தனையையும் முதலாளித்துவ சிந்தனையையும் எடுத்துக் காட்டுகின்றன. வரி வசூலில் சில நேரங்களில் வேந்தாகள் உழுதுண்பர்களைக் கடினப்படுத்திப் வரி பெற்றதையும் இலக்கியங்கள் பதிவு செய்யத் தவறவில்லை.

“காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே.
மாநிறைவு இல்லதும், பல் நாட்கு ஆகும்
நூறுசெறு ஆயினும், தமித்துப் புக்கு உணினே,
வாய் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே.
போடி யாத்து, நாடு பெரிது நந்தும்
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்வென் சுற்றமொடு,
பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம் போல,
தானும் உண்ணான், உலகமும் கெடுமே.”

என்று பாடலில் மக்களைக் கட்டாயப்படுத்தி வரி வசூல் செய்தால் அவாகள் துன்பம் மிகுந்து அழிவாரோடு வேந்தனும் அழிந்து போக்ககூடும் என்று பிசிராந்தையார் வேந்தனுக்கு ஒருவனை எச்சரிக்கை விடுவதிலிருந்து வேந்தர் சமூகத்தில் நிலம் தனியுடைமையாக மாறியதையும் அவர்கள் மக்களிடம் பெரும் பொருட்களை வரியாக வசூலித்தததையும் காட்டுகிறது.

**முடிவுரை**

இன்ககுழுச் சமூகத்தில் உணவு உற்பத்தியும் பகிர்மானமும் பொதுவில் இருந்தன. வேளிர்கள் மக்களோடுமக்களாகக் கலந்து இருந்தமையால் ஆட்சி அல்லது ஆளும் நோக்கம் அற்றவர்களாக இருந்தனர். பின்னர் உருவாகிய முதுகுடி அல்லது குறுநில் மன்னர் சமூகத்தில் நிலம் மீதான உடைமை நோக்கம் தோன்றியிருந்தாலும், உணவுப் பகிர்மானம் என்பது பொதுவிலே இருந்தது. தன் இனத்தைச் சார்ந்த மக்கள் அனைவருக்கும் உணவுப் பொருட்கள் உற்பத்தியிலும் பகிர்மானத்திலும் பங்கீடு கொடுக்கப்பட்டது. ஆனால் வேந்தர் சமூகத்தில் நிலம் உரியவரிடமிருந்து கட்டாயமாகக் கையப்படுத்தப்பட்டு தனிநபரின் உடைமைப் பொருளாக மாற்றப்பட்டது. நிலத்தைப் பயன்படுத்துவோரிடமிருந்து வரிகளும் வசூலிக்கப்பட்டன, வேளிர், முதுகுடி மன்னர்களின் பொதுவுடைமையாகக் கருதப்பட்ட நிலம், நிலம் சார்ந்த பொருட்கள் வேந்தர் காலத்தில் தனியொருவன் பயன்பாட்டிற்கு மாறியதோடு உடைமைச் சமூகத்தையும் தோற்றுவித்தன.